**பல்கலைக்கழக சேமலாப நிதியம் - 2015**

---

பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12(5) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழக சேமலாப நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்திற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் செய்யப்பட்ட ரூபா 1,304,400 தொகையான செலவினம் நிதியத்தின் செலவினமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செலவினமாகக் கருதப்பட்டிருந்தது.

(ஆ) பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 94 ஆம் பிரிவின் பிரகாரம் பங்களிப்பாளரின் தவறு அல்லது கவனமின்மையின் காரணமாக உயர்கல்வி நிறுவனத்திற்கு ஏதாவது நட்டமொன்று அல்லது இழப்பொன்று ஏற்படுமாயின் அந்தத் தொகை சேமலாப நிதியத்தில் அந்தப் பங்களிப்பாளரின் செலவு வைப்பதற்கு உள்ள தொகைக்கு முன்னரான செலவினப் பொறுப்பாக இருந்த போதிலும் உடன்படிக்கையை மீறியமைக்காக நிதியத்திற்குக் கிடைக்க வேண்டிய தொகையின் அளவை இனங்கண்டு கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள சேமலாப நிதியத்தின் பெறுமதியான ரூபா 25,369,758 தொகையில் பங்களிப்பாளர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய பணம் அறவிடப்பட்டு எஞ்சிய தொகையாக அவர்களுக்கு தீர்த்துவைக்கப்பட வேண்டிய மீதி 01 வருடம் முதல் 14 வருடங்கள் வரையான காலப்பகுதியில் மீதியாகக் காணப்பட்ட போதும் விண்ணப்பப் படிவத்தினால் காணப்படுகின்ற குறைபாடுகளின் காரணமாக இந்தத் தொகையைத் தீர்த்து வைக்க முடியாதிருந்ததாக நிதியத்தினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தின் போது இரண்டு உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 222,681 கூட்டுத்தொகையான சேமலாப நிதியப் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்கமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய அமப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட அளவினை விட அதிகமாக பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைத்தமையின் காரணமாக சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் அளவு குறைவடைந்திருந்தது. |
| (ஆ) 2015 இன் 01 ஆம் இலக்க பல்கலைகழக சேமலாப நிதிய விதிக்கோவை | |
| (i) 08 ஆம் பந்தி | நிதியத்தின் முதலீட்டுத் தீர்மானங்களுடன் தொடர்புபடும் முதலீட்டுக் குழுக்களுக்கு செலுத்தப்படுகின்ற படிகள் நிதியத்தின் செலவினமாக பதிவழிப்பதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 10 ஆம் பந்தி | நிதியத்தின் நடவடிக்கைகள் ஏதாவது குறித்த காலப்பகுதியில் ஒரு தடவை மீளாய்வு செய்வதற்காகவும், நிதியத்தின் கொள்கை விடயங்கள் தொடர்பாக ஆணைக்குழுவிற்கு ஆலோசனை வழங்குவதற்காகவும் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நிதியத்தின் மேற்பார்வைச் சபையொன்று இருக்கவேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அவ்வாறு மேற்பார்வைச் சபையொன்று நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,545,061,004 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,512,880,552 ஆனமையால் முன்னைய ஆண்டுகள் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 32,180,452 தொகையான அதிகரிப்பொன்றைக் காட்டியது. முதலீட்டு வருமானம் ரூபா 5,374,353 ஆல் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டின் போது நிதியத்தின் நடைமுறைச் சொத்து விகிதம் 14:1 ஆக இருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நடைமுறைச் சொத்து விகிதம் 88 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. குறுங்கால வைப்பு ரூபா 2,502,000,000 இனால் உயர்வடைந்தமை இதற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைகழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களினால் பங்களிப்பாளர்களின் அறிக்கை மற்றும் பொறுப்புக் கூற்றுக்கள், சேமலாப நிதியத்திற்கு அனுப்புவதிலுள்ள தாமதத்தின் காரணமாக 17 சேமலாப நிதிய மீதிகளை தீர்ப்பதற்கு 06 வருடங்கள் வரையிலான காலதாமதமொன்று அவதனிக்கப்பட்டிருந்த போதிலும், இந்த நிலைமையை இழிவுபடுத்தி நிதியத்தின் கொடுப்பனவுகளை நாளதுவரையாக்குவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் போது சேமலாப நிதிய மீதிக்கு விண்ணப்பித்த பங்களிப்பாளர்களில் உடன்படிக்கை மற்றும் பிணைமுறிகளை மீறிய 17 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 41,230,956 தொகை அறவிடவேண்டியிருந்தது. அந்த உத்தியோகத்தர்களின் சேமலாப நிதிய மீதியாக கூட்டுத்தொகை ரூபா 17,515,669 ஆனமையால் சேமலாப நிதிய மீதியை விஞ்சி ரூபா 23,715,287 தொகை இன்னும் உயர்கல்வி நிறுவனத்திற்கு அறவிட வேண்டிய மீதியாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் சேமலாப நிதியத்திலிருந்து உரிய நிறுவனத்திற்கு அறவிடவேண்டிய பணத்தை அறவிட்டு, பல்கலைக்கழகத்திற்கு அறிவிப்பதிலுள்ள தாமதத்தின் காரணமாக அந்த உத்தியோகத்தர்களின் எஞ்சிய மீதியை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

நிலுவை வாழ்க்கைச் செலவினத்தைத் தீர்ப்பதற்காக 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 525,000,000 தொகையில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 104,893,466 தொகை உரிய பணிகளுக்கு ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன் அதற்காக பல்கலைக்கழகத்தினால் தேவையான அறிக்கைகளால் பெற்று உரிய நிதியைத் தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிலுவை வாழ்க்கைச் செலவினத்தை பதிவழிப்பதற்கு திறைசேரியிலிருந்து கிடைத்த பணத்தை உரிய பணிகளுக்கு பயன்படுத்துதல்.

(ஆ) பங்களிப்புப் பணத்தை அறவிடல் மற்றும் சேமலாப நிதியத்தின் மீதியை விடுவித்தலிலுள்ள தாமதத்தை இழிவுபடுத்துதல்.